<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO. 100/2018

Deposition of Witness : DW–1

Name : நாகலஷ்மி

Father's Name /W/o : க/பெ. மதிவாணன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : சிறுநமல்லி கிராமம், அரக்கோணம் வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 01.02.2024

குறுக்கு விசாரணை:

1. குணசேகரன் எதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து என் தகப்பனார் கோவிந்தராஜ்க்கு சொந்தமானது என்றால் ஆம். கோவிந்தராஜ் 2007 ல் வழக்கு சொத்து உட்பட 16 3/4 செண்டை வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் ஆம். 2007 முதல் அவர் தான் சொத்தை ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் ஆம். 2010 ல் என் பெயரில் வாதி 11 செண்ட் கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் ஆம். அதன் பிறகு 2 1/4 செண்ட் என் பெயரில் வாதி 2010 ல் கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் ஆம். 2 வதாக எழுதப்பட்ட கிரைய பத்திரத்தில் 2 1/4 செண்ட் இடத்தில் வாதியின் வீடு இருந்தது என்றால் இல்லை. வாங்கிய பிறகு நான் செட்டு போட்டேன். 2 1/4 செண்டிற்கு நான் பணம் கொடுக்கவில்லை என்றாலும் பணத்தை கொடுத்தபிறகு காலி செய்யலாம் என்று அந்த வீட்டில் இருந்தார் என்றால் இல்லை. 2 1/4 செண்ட் கிரையத்தில் பணம் தரவில்லை என்பதற்கு சாட்சிகள் உள்ளார்கள் என்றாலும் நான் பணம்

கொடுத்தாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரையம் எழுதிக்கொடுத்தபிறகு நான் வீட்டை பிரித்துவிட்டதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் நான் பிரிக்கவில்லை. மழை காற்றில் விழுந்து விட்டது. அப்போது வீடு ஏற்கனவே இருந்தது என்றால் நாங்கள் தான் வீட்டை கட்டினோம். நான் பணம் தரவில்லை என்பதால் தான் இன்றைய தேதி வரையில் வருவாய் ஆவணங்கள் வாதி பெயரில் தான் உள்ளது என்றால் பணி நிமிந்தமாக என்னால் விடுமுறை எடுத்து ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யமுடியவில்லை.

2. வாதி வழக்கு போடுவதற்கு முன்பு நான் காஞ்சிபுரத்தில் குடியிருந்தேன் என்றால் இல்லை. 2 1/4 செண்ட் வாங்கிய உடனே 2010 ல் இங்கு வந்துவிட்டேன். நான் காஞ்சிபுரத்தில் வசிப்பதால் தான் நீதிமன்ற அழைப்பாணை நான் காஞ்சிபுரம் முகவரியில் பெற்றேன் என்றால் அங்கு உள்ள வீட்டு முகவரிக்கு வந்த தபால் பற்றி எனக்கு தகவல் வந்து சென்று வாங்கினேன். 2 1/4 செண்ட் பெயர் அளவில் தான் என் பெயரில் கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றாலும் அதற்கான கிரைய தொகை கொடுக்கவில்லை என்றாலும் சொத்து அவர் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. என் அனுபவத்தில் தான் உள்ளது. நான் வாதியின் சகோதரி என்பதன் நம்பிக்கையில் தான் என் பெயருக்கு பணத்தை வாங்காமல் கிரைய கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தான் சொத்தை வாங்கியது முதல் அனுபவத்தில் உள்ளேன். கடனை அடைக்கவேண்டும் என்று என்னிடம் அழுத்தம் கொடுத்து வாங்கினார். 2 1/4 செண்ட்டில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் பெயர் அளவில் மட்டும்தான் ஆவணம் என் பெயரில் உள்ளது என்றாலும் இன்றைய தேதி வரையில் வாதி அனுபவத்தில் உள்ளது வருவாய் ஆவணங்களும் அவர் பெயரில் உள்ளது என்றால் இல்லை என் அனுபவத்தில் உள்ளது. வாதி அனுபவத்தில் சொத்து உள்ளதால் தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.